DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 64/2018 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 2 |
| Name | முருகேஸ்வரி |
| Father / Husband Name | முத்துமாரி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 22nd June 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் சிவகங்கை இந்திராநகரில் வசித்து வருகின்றேன். சொந்த ஊர் கீழவாணியங்குடி. நான் வீட்டுக்குடித்தனம் நடத்தி வருகிறேன். அ.சா. 1 என் கணவர். அவர் மின்சார வாரியத்தில் பணிபுரிந்து தற்சமயம் ஓய்வு பெற்றுவிட்டார். எனக்கு ஒரு பெண் பிள்ளை மட்டும் உள்ளது அவரை திருமணம் செய்து கொடுத்துவிட்டோம். எனது இரண்டு மகன்களில் ஒரு மகன் சிறுவயதிலேயே இறந்துவிட்டார். மற்றொரு மகன் தான் விபத்தில் இறந்தவர்.

2) தேதி, மாதம் ஞாபகமில்லை 2015ம் வருடம் காலை 09.15 மணிக்கு கீழவாணியங்குடி பெட்ரோல் பல்க் , கிறிஸ்தவர் கல்லறைத்தோட்டம் ஓரத்தில் என் மகன் நடந்து சென்று கொண்டிருந்த போது இருசக்கர வாகனத்தில் தெற்கு நோக்கி வந்த நபர் என் மகன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். நானும், என் தம்பியும் என் தம்பியின் கறிக்கடையில் நின்று கொண்டிருந்த போது விபத்தை பார்த்தோம்.

3) விபத்து நடந்த அன்று விபத்தை ஏற்படுத்திய நபரை பார்த்தேன் ஆனால் தற்சமயம் அவரின் முகம் ஞாபகத்திற்கு இல்லை. அவரை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியுமா என்றால் முடியும் இன்றைய தினம் அந்த அடையாளத்தில் நீதிமன்றத்திற்கு யாரும் வரவில்லை. மேற்படி விபத்தில் என் மகனுக்கு நெற்றி, மார்பில் அடிபட்டது, வலது கால் எலும்பு நொறுங்கிவிட்டது.

4) விபத்தில் காயம்பட்ட என் மகனை அந்த வழியாக வந்த ஆட்டோவில் ஏற்றி நானும், என் தம்பியும், என் கணவரும் எனது மகனை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். என் மகன் 15- 20 நாட்கள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துவிட்டார் இறக்கும்போது என் மகனுக்கு 27 வயது. என் மகன் வாய்பேசமாட்டார். இது சம்பந்தமாக என் கணவர் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என் தம்பி உடன் சென்றார். என் மகனின் பிரேதத்தை பிரேத விசாரணைக்கு பின்னர் எங்கள் வசம் ஒப்படைத்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) விபத்து நடந்த சமயத்தில் என் வீடு எங்கிருந்தது என்றால் இந்திராநகர் தான். என் தம்பி என்ன வேலை செய்கிறார் என்றால் இந்திராநகர் கிறிஸ்தவர் கல்லறைத் தோட்டம் அருகே கறிக்கடை வைத்திருந்தார். என் மகன் படிக்கவும் இல்லை, வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரிதான். நான் தான் என் மகனை வீட்டில் வைத்து பராமரித்து வந்தேன் என்றால் சரிதான். நான் தான் என் மகனை வெளியில் அழைத்துச் செல்வேன் என்றால் சரியல்ல அவரே சென்றுவருவார்.

2) என் மகனுக்கு மதுரை, சிவகங்கை உள்ளிட்ட இடங்களில் சிகிச்சை எடுத்துள்ளோம் என்றால் சரிதான். எது சம்பந்தமாக சிகிச்சை எடுத்தோம்

என்றால் வாய் பேசாமல் இருப்பதற்காக சிகிச்சை எடுத்தோம். உண்மையில் என் மகன் வாய்பேசாமலும், நடக்காமலும், மனநிலை குன்றி இருப்பதாலும் சிகிச்சை எடுத்தோம் என்றாலும், அதனை மறைத்து வழக்கிற்காக வாய்பேசாமல் இருந்ததற்காக மட்டும் சிகிச்சை எடுத்ததாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றது .

3) வாணியங்குடி ரோட்டில் இருந்து எவ்வளவு தூரத்தில் என் வீடு உள்ளது என்றால் 10 வீடுகள் தள்ளி போகவேண்டும். விபத்து நடந்த இடத்திற்கும், என் தம்பியின் கறிக்கடைக்கும் 30-40 அடி தூரம் இருக்குமா என்றால் ஆமாம். விபத்து நடந்த உடனே என் கணவருக்கு தகவல் சொல்லி என் கணவர் சம்பவ இடத்திற்கு உடனே வந்துவிட்டார் என்றால் சரிதான். இந்த விபத்து சிவகங்கை - மானாமதுரை ரோட்டின் கிழக்கு பக்கம் நடந்தது என்றால் சரிதான்.

4) என் வீடு சிவகங்கை - மானாமதுரை ரோட்டின் கிழக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், என் மகன் தான் எதிரி ஓட்டி வந்த வாகனத்தின் குறுக்கே வந்து விபத்தில் சிக்கிவிட்டார் என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த அன்றே என் தம்பியும், என் கணவரும் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல 3 நாட்கள் கழித்து தான் புகார் கொடுத்தார்கள் என் மகன் இறந்த உடன் தான் புகார் கொடுத்தார்கள்.

5) எனது மகன் தான் வாகனத்திற்கு குறுக்கே வந்துவிட்டார் என்றும் அதனால் எதிரியுடன் பேச்சு வார்த்தை நடத்தி கொள்கிறேன் என்று சொல்லி காவல் நிலையத்தில் எனது கணவரும், என் தம்பியும் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் விபத்து ஏற்படவில்லை என்றாலும், என் கணவர் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

**(ஓம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 22.06.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**